Padasalai's Telegram Groups!

(தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்!)

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

சுராவின்

5-in-1

8ஆம் வகுப்பு

மூன்றாம் பருவம்

தமிழ் • ENGLISH • கணக்கு

அறிவியல் • சமூக அறிவியல்

சிறப்பம்சங்கள்

- 2019-20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- அலகு தேர்வு வினாத்தாள்- விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

2019 - 20 Edition

© Reserved with Publishers

ISBN : 978-81-8449-778-6
Code No. : T3-C-8 (TM)

தலைமை அலுவலகம்:
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040. ☎ 044-4862 9977, 044-486 27755
81242 01000/ 81243 01000
e-mail : orders @surabooks.com, **website :** www.surabooks.com

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 80562 94222 / 80562 15222
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
ஆன்லைன் வலைதளம் : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

Our Guides for Std. IX

TERMWISE GUIDES (for each Term)
- Sura's Tamil Guide
- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM & TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's 5-in-1 with all 5 subjects in one guide (EM & TM)

FULL YEAR GUIDES for 3 Terms together
- Sura's Tamil Guide
- Sura's English Guide
- Sura's Maths Guide (EM & TM)
- Sura's Science Guide (EM &TM)
- Sura's Social Science Guide (EM & TM)
- Sura's Map Workbook (EM & TM)

Our Guides for Std. X

GUIDES
- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Will to Win English Guide
- Sura's Science Guide (EM & TM)
- Sura's English Guide
- Sura's Mathematics Guide (EM & TM)
- Sura's Social Science Guide (EM & TM)

QUESTION BANKS
- Sura's PTA Solution Book & Exam Refresher (EM & TM)
- Sura's 5-in-1 Question Bank (EM & TM)
- Sura's Sigaram Thoduvom 5-in-1 One Mark (EM & TM)
- Sura's Sigaram Thoduvom (EM & TM) for each subject
- Sura's Will to Win 1 Mark Q & A - English Paper I & II
- Sura's Map Workbook (EM & TM)

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

பொருளடக்கம்

மனப்பாடச் செய்யுள் பகுதி 1

இயல்	பொருண்மை	பாடத் தலைப்புகள்	பக்க எண்	மாதம்
1.	நாடு/சமூகம்/ பாருக்குள்ளே நல்ல நாடு	படைவேழம் (செய்யுள்)	3-24	ஜனவரி
		விடுதலைத் திருநாள் (செய்யுள்)		
		பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் (உரைநடை)		
		அறிவுசால் ஔவையார் (துணைப்பாடம்)		
		வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் (கற்கண்டு)		
		அலகு தேர்வு -1		
2.	அறம்/ தத்துவம்/ சிந்தனை அறத்தால் வருவதே இன்பம்	ஒன்றே குலம் (செய்யுள்)	25-48	பிப்ரவரி
		மெய்ஞ்ஞான ஒளி (செய்யுள்)		
		அயோத்திதாசர் சிந்தனைகள் (உரைநடை)		
		மனித யந்திரம் (துணைப்பாடம்)		
		யாப்பு இலக்கணம் (கற்கண்டு)		
		திருக்குறள்		
		அலகு தேர்வு -2		
3.	மனிதம்/ ஆளுமை குன்றென நிமிர்ந்துநில்	உயிர்க்குணங்கள் (செய்யுள்)	49-74	மார்ச்
		இளைய தோழனுக்கு (செய்யுள்)		
		சட்டமேதை அம்பேத்கர் (உரைநடை)		
		பால் மனம் (துணைப்பாடம்)		
		அணி இலக்கணம் (கற்கண்டு)		
		அலகு தேர்வு -3		
சுராவின் மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் 2019- 20 (மூன்று பருவங்களையும் உள்ளடக்கிய வினாத்தாள்) விடைகளுடன்				

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

ENGLISH

Units	Name	Page No.
1	Prose - The Nose-Jewel	77 - 92
	Poem* - Special Hero	93 - 96
	Supplementary - The Woman on platform 8	97 - 103
	Unit Test Questions with Answers	103 - 104
2	Prose - Cyber Safety	105 - 114
	Poem - My Computer Needs A Break	115 - 119
	Supplementary - The Mystery of the Cyber Friend	120 - 126
	Unit Test Questions with Answers	126 - 127
3	Play - Jack and the Beanstalk	128 - 136
✦	**Sura's Public Exam Model Question Paper with Answers** *(Inclusive of 1st and 2nd Term Portions also)*	137 - 139
✦	**Tamil Translation**	140 - 150

* Memory Poem

கணக்கு

வ. எண்	அலகு	பக்க எண்
1	எண்கள்	153 - 189
2	வாழ்வியல் கணிதம்	190 - 209
3	வடிவியல்	210 - 234
4	புள்ளியியல்	235 - 261
5	தகவல் செயலாக்கம்	262 - 276
	சுராவின் பொதுத் தேர்வு மாதிரி வினாத்தாள்	277 - 280

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

அறிவியல்

வ. எண்	அலகு	பக்க எண்
1	ஒலி	283 - 294
2	காந்தவியல்	295 - 304
3	அண்டமும் விண்வெளி அறிவியலும்	305 - 314
4	நீர்	315 - 326
5	அமிலங்கள் மற்றும் காரங்கள்	327 - 336
6	அன்றாட வாழ்வில் வேதியியல்	337 - 348
7	பயிர் பெருக்கம் மற்றும் மேலாண்மை	349 - 358
8	தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாதுகாப்பு	359 - 371
9	காட்சித் தொடர்பியல்	372 - 375
	சுராவின் பொதுத் தேர்வு மாதிரி வினாத்தாள்	376 - 378

சமூக அறிவியல்

அலகு	தலைப்புகள்	பக்க எண்
	வரலாறு	
1	ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்	381 - 389
2	காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை	390 - 398
	புவியியல்	
1	தொழிலகங்கள்	399 - 406
2	கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா)	407 - 420
3	புவிப்படங்களைக் கற்றறிதல்	421 - 427
	குடிமையியல்	
1	பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை	428 - 436
2	நீதித்துறை	437 - 445
	பொருளியல்	
1	பொது மற்றும் தனியார் துறைகள்	446 - 455
	சுராவின் பொதுத் தேர்வு மாதிரி வினாத்தாள்	456 - 458

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

TO ORDER WITH US

SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**

Kindly prepare your order in your School letterhead and send it to us.

For Orders contact: 80562 94222 / 80562 15222

DIRECT DEPOSIT

A/c Name	: **Sura Publications**	A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **36550290536**	Our A/c No.	: **21000210001240**
Bank Name	: **STATE BANK OF INDIA**	Bank Name	: **UCO BANK**
Bank Branch	: PADI	Bank Branch	: Anna Nagar West
IFSC	: SBIN0005083	IFSC	: UCBA0002100
A/c Name	: **Sura Publications**	A/c Name	: **Sura Publications**
Our A/c No.	: **6502699356**	Our A/c No.	: **1154135000017684**
Bank Name	: **INDIAN BANK**	Bank Name	: **KVB BANK**
Bank Branch	: ASIAD COLONY	Bank Branch	: Anna Nagar
IFSC	: IDIB000A098	IFSC	: KVBL0001154

After Deposit, please send challan and order to our address.

email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

STUDENTS :

Order via Money Order (M/O) to

SURA PUBLICATIONS

1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,

Chennai - 600 040.

Phones : 044-4862 9977, 044-486 27755.

Mobile : 81242 01000/ 81243 01000

email : orders@surabooks.com Website : www.surabooks.com

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

பொருளடக்கம்

மனப்பாடச் செய்யுள் பகுதி 2

இயல்	பொருண்மை	பாடத் தலைப்புகள்	பக்க எண்
1.	நாடு/சமூகம்/ பாருக்குள்ளே நல்ல நாடு	படைவேழம் (செய்யுள்)	3-24
		விடுதலைத் திருநாள் (செய்யுள்)	
		பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் (உரைநடை)	
		அறிவுசால் ஔவையார் (துணைப்பாடம்)	
		வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் (கற்கண்டு)	
		அலகு தேர்வு -1	
2.	அறம்/ தத்துவம்/ சிந்தனை அறத்தால் வருவதே இன்பம்	ஒன்றே குலம் (செய்யுள்)	25-48
		மெய்ஞ்ஞான ஒளி (செய்யுள்)	
		அயோத்திதாசர் சிந்தனைகள் (உரைநடை)	
		மனித யந்திரம் (துணைப்பாடம்)	
		யாப்பு இலக்கணம் (கற்கண்டு)	
		திருக்குறள்	
		அலகு தேர்வு -2	
3.	மனிதம்/ ஆளுமை குன்றென நிமிர்ந்துநில்	உயிர்க்குணங்கள் (செய்யுள்)	49-74
		இளைய தோழனுக்கு (செய்யுள்)	
		சட்டமேதை அம்பேத்கர் (உரைநடை)	
		பால் மனம் (துணைப்பாடம்)	
		அணி இலக்கணம் (கற்கண்டு)	
		அலகு தேர்வு -3	
சுராவின் மாதிரி பொதுத்தேர்வு வினாத்தாள் 2019- 20 (மூன்று பருவங்களையும் உள்ளடக்கிய வினாத்தாள்) விடைகளுடன்			

தமிழ்

மூன்றாம் பருவம்

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)
ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் என நடுங்கியே (3)

- செயங்கொண்டார்

இயல் - 2

ஒன்றே குலம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே.

- திருமூலர்

திருக்குறள்

படைச்செருக்கு

1. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

நட்பு

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பண்புடைமை

9. பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். - திருவள்ளுவர்

இயல் - 3

இளைய தோழனுக்கு

ஓடிவந்து கைகுலுக்க
ஒருவருமில்லையா?
உன்னுடன் நீயே
கைகுலுக்கிக் கொள்!

தூங்கி விழுந்தால்
பூமி உனக்குப்
படுக்கையாகிறது.
விழித்து நடந்தால்
அதுவே உனக்குப்
பாதையாகிறது!
நீ
விழித்தெழும் திசையே
பூமிக்கு கிழக்கு!
உன்
விரல்களில் ஒளிரும்
சூரியவிளக்கு!

நட!
நாளைமட்டுமல்ல
இன்றும்
நம்முடையதுதான்
நட!

- மு.மேத்தா

☆☆☆

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

இயல் 1

படை வேழம்

கவிதைப்பேழை

பாடல்

கலிங்கப் படையின் நடுக்கம்

எதுகொல் இது மாயை ஒன்றுகொல்
எரிகொல் மறலிகொள் ஊழி யின் கடை
அதுகொல் என அலறா இரிந்தனர்
அலதி குலதியொடு ஏழ்க லிங்கரே (1)

கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)

ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் என நடுங்கியே (3)

மக்கள் அதிர்வன போல் உடன்றன
வளவன் விடுபடை வேழம் என்றிருள்
முழைகள் நுழைவர்கள் போரில் இன்றுநம்
முதுகு செயும்உப காரம் என்பரே. (4)

– செயங்கொண்டார்

சொல்லும் பொருளும்

1. மறலி	– காலன்	6. வழிவர்	– நழுவி ஓடுவர்
2. கரி	– யானை	7. பிலம்	– மலைக்குகை
3. தூறு	– புதர்	8. மண்டுதல்	– நெருங்குதல்
4. அருவர்	– தமிழர்	9. இறைஞ்சினர்	– வணங்கினர்
5. உடன்றன	– சினந்து எழுந்தன	10. முழை	– மலைக்குகை

பாடலின் பொருள்

சோழர் படையின் தாக்குதலைக் கண்ட கலிங்கர், இஃது என்ன மாய வித்தையா என வியந்தனர். தம்மை எரிக்க வந்த தீயோ என அஞ்சினர். சோழர்படை தம் உயிரைப் பறிக்கும் காலனோ என அஞ்சினர்; தமது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணி, அலைந்து குலைந்து நடுங்கினர்.

அப்படி நடுங்கிய கலிங்கப் படையினர் படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். சிலர் கடலில் தாவிக் குதித்துத் தப்பினர். சிலர் யானைகளின் பின்னே மறைந்துகொண்டனர். எத்திசையில் செல்வது எனத் தெரியாமல், செல்வதற்கு அரிதான மலைக் குகைகளினுள்ளும் புதர்களுக்குள்ளும் தப்பி ஓடினர்.

கலிங்க வீரர்கள் ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு ஓடினர். தம் நிழலையும் மற்றவர் நிழலையும் கண்டு தமிழர்கள் துரத்தி வருவதாக எண்ணி அஞ்சினர்; தஞ்சம் வேண்டி வணங்கினர்.

சோழ மன்னனின் படையிலுள்ள யானைகள் சினமுற்று இடியைப் போலப் பிளிறின; அவ்வோசையைக் கேட்டு அஞ்சிய வீரர்கள் இருள் நிறைந்த குகைக்குள் சென்று மறைந்தனர்; ஏனையோர் புறமுதுகுகாட்டி ஓடிப் பிழைத்தனர்.

நூற்குறிப்பு

கலிங்கத்துப்பரணி தொண்ணூற்று வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பரணி வகையைச் சார்ந்த நூல். தமிழில் முதல் முதலில் எழுந்த பரணி இந்நூலே ஆகும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

கற்பவை கற்றபின்

1. உங்களுக்குத் தெரிந்த சிற்றிலக்கிய வகைகளின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

சிற்றிலக்கிய வகைகளின் பெயர்கள் : சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் எனக்குத் தெரிந்தவை.

1. உலா	9. நான்மணிமாலை
2. ஊசல்	10. பதிகம்
3. ஒருபா ஒருபது	11. அந்தாதி
4. குறவஞ்சி	12. பரணி
5. சதகம்	13. கலம்பகம்
6. தாண்டகம்	14. பள்ளு
7. தூது	15. குறம்
8. நவமணிமாலை	

2. போர்க்கருவிகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

கூடுதல் வினாக்கள்

நிரப்புக :

1. தமிழர்கள் தமது உடைகளாகக் கொண்டவை அறம், வீரம்.
2. கலிங்கத்துப்பரணி சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
3. சோழமன்னனின் படையிலுள்ள யானைகள் இடியைப் போல் பிளிறின.
4. கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் செயங்கொண்டார்.
5. செயங்கொண்டார் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர் என்பர்.
6. செயங்கொண்டார் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்.
7. செயங்கொண்டாரைப் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று புகழ்ந்தவர் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.
8. தமிழில் முதன்முதலில் எழுந்த பரணி நூல் கலிங்கத்துப்பரணி.
9. கலிங்கத்துப்பரணியைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி என்று ஒட்டக்கூத்தர் புகழ்ந்துள்ளார்.
10. கலிங்கத்துப்பரணி கலித்தாழிசையால் பாடப்பெற்றது.
11. கலிங்கத்துப்பரணியில் மொத்த தாழிசைகள் 599
12. சோழர் படையின் தாக்குதலைக் கண்டு ஓடியவர்கள் கலிங்கர்.
13. சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.

விடையளி :

1. செயங்கொண்டார் குறிப்பு வரைக.

(i) கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் செயங்கொண்டார்.
(ii) இவர் தீபங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்தவர்.
(iii) இவர் முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்.
(iv) இவரைப் பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பரணிக்கோர் செயங்கொண்டார் என்று புகழ்ந்துள்ளார்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....

அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து
இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

[விடை: ஆ) காட்டையெரித்து]

6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....

அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

[விடை: அ) இதந்தரும்]

குறுவினா

1. பகத்சிங் கண்ட கனவு யாது?

இந்தியா அந்நியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதே பகத்சிங் கண்ட கனவு ஆகும்.

2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் ஆட்சியை இருண்ட ஆட்சி என மீரா குறிப்பிடுகிறார்.

சிறுவினா

இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

(i) முந்நூறு ஆண்டுகள் அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது. உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டினோம்.

(ii) அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளிக்கின்றாள்.

சிந்தனை வினா

நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?

(i) நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாள் விழாவில் பல கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்த வேண்டும்.

(ii) நம்மைப் பெற்றெடுத்த தாயை எவ்வாறு போற்றுவோமோ, அதேபோல் நம் தாய்நாட்டின் பெருமையையும் பழமையையும் மாணவர்கள் அறியும்படி உரையாற்ற வேண்டும்.

(iii) நாம் அடிமைகளாய் இருந்ததைக் கூறி அடிமைத்தளையை நீக்கியவர்களின் தியாகத்தைக் கூறும் வகையில் சிறு நாடகம் நடத்த வேண்டும்.

(iv) சாதி, மத பேதங்களினால் நாம் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

(v) நாட்டின் பாரம்பரியம் கலாச்சாரத்தை மதித்து நடக்க வேண்டும். தேசிய சின்னங்கள், தேசியக் கொடி, தேசியப்பாடல் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். நாட்டிற்குச் சேவை செய்ய எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஊர்க்காவல் படை, மாணவர் தேசியப்படை ஆகியவற்றில் பங்காற்றல் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு விடுதலை நாளைக் கொண்டாடலாம்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

நெடுவினா

எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

எம்.ஜி.ஆரின் பண்புநலன்கள் :

எம்.ஜி.ஆர். ஒரு முறை வெளியூரிலிருந்து மகிழ்வுந்தில் சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். வழியில் மூதாட்டி ஒருவரும் பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும் தலையில் புல்கட்டுகளைச் சுமந்தவாறு கால்களில் காலணிகள் இல்லாமல் சென்று கொண்டிருந்தனர். சாலையின் சூடு பொறுக்கமுடியாமல் அவர்கள் சாலையோர மரநிழலில் நிற்பதும் ஓடுவதுமாக இருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர். உடனே தமது மகிழ்வுந்தை நிறுத்தச் செய்தார். உடன் வந்த தமது துணைவியாரது காலணியையும் உறவினரான பெண்ணின் காலணியையும் அவர்களிடம் கொடுக்கச் செய்தார். மேலும் அவர்களுக்குப் பணமும் கொடுத்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார். ஏழை எளியவர்கள் காலில் காலணிகூட இல்லாமல் நடந்து செல்லும் இந்நிகழ்ச்சி அவரது மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. அதனால், பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார்.

எம்.ஜி.ஆர். ஒரு முறை படப்பிடிப்பிற்காகக் காஷ்மீருக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த இந்தியப் படைவீரர் நலச்சங்கத்தினர் தமது சங்கவிழாவிற்கு எம்.ஜி.ஆர். வருகைதர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அதற்கு ஒப்புக்கொண்ட அவர் அச்சங்கத்திற்கு நன்கொடை வழங்க விரும்பினார். ஆனால் அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. எனவே, அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று அதனை நன்கொடையாக வழங்கினார். சென்னை திரும்பியதும் முதல் வேலையாக அத்தொகையைத் திருப்பிக் கொடுத்தார்.

இவ்வாறு பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியமையால் தான் அவரைப் பொன்மனச்செம்மல் என்று மக்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

சிந்தனை வினா

சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் :

(i) விடாமுயற்சியுடனும் சுய அறிவாற்றலுடனும் அவர்களுக்கென தனிப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
(ii) பொறுமையுடன் செயல்களைச் செய்தல், தன்னிடம் வரும் பிரச்சனைகளைப் பொறுமையுடன் தீர்த்து வைத்தல்.
(iii) குறைவாய்ப் பேசி நிறைவாய் வேலை செய்யும் மனமுடையவராய் இருத்தல்.
(iv) இது இல்லை அது இல்லை என்று கூறாமல் 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதைப் போல் இருக்கும் வளத்தைப் பயன்படுத்தி செயல்களைச் செய்தல்.
(v) பிறருடைய கருத்துகளுக்கும் மதிப்பு அளித்தல்.
(vi) தன்னிடம் நியாயம் இருந்தாலும் யாரிடமும் விவாதம் செய்யாமல் இருத்தல்.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

கொண்டிருந்தான். அப்போது படைத்தலைவர் "அதியமான் நம் படையின் பெருக்கத்தைக் கண்டு அதிர்ந்துபோய், சமாதானம் வேண்டிப் புலவர் ஒருவரைத் தூது அனுப்பியுள்ளார்" என்று கூறினான்.

தொண்டைமான் ஔவையாரை வரவேற்றான். போர்க்கருவிகள் நிறைந்த படைக்கலக் கொட்டிலைப் பார்க்க அழைத்துச் சென்றான். அப்படைக் கருவிகளைப் பார்த்து ஔவையார் "அளவுக்கதிகமான கருவிகள், அழகாக அடுக்கி வைத்திருக்கும் முறை, புத்தம் புதியனவாய் நெய் பூசப்பெற்று மாலையும் மயில் தோகைகளும் அணிவிக்கப்பட்டு அழகாக உள்ளன" என்றார்.

மேலும், "அதியமான் எப்போதும் போர் புரிந்து கொண்டே இருப்பதால் அவனது படைக்கருவிகள் பகைவர் உடலைத் துளைத்த குருதிக் கறைகளுடன் நுனி ஒடிந்தும் கூர் மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடக்கின்றன" என்று கூறினார்.

ஔவையாரின் பேச்சில் இருந்த உட்பொருளை உணர்ந்த தொண்டைமான். 'தான் இதுவரை போர்க்களத்தைக் கண்டதில்லை என்றும், அதியமான் பல போர்களைக் கண்டுள்ளான்' என்றும், கூறி அதியமானுடன் போரிடப் போவதில்லை என்று முடிவெடுத்தான். இதனை அதியமானிடம் தெரிவிக்கும்படியும் கூறினான்.

ஔவையாரின் அறிவு சார்ந்த செயலினால் இழப்புகளின்றி நாடும், நாட்டு மக்களும் காப்பாற்றப்பட்டனர்.

கற்பவை கற்றபின்

1. அறிவுசால் ஔவையார் – என்னும் நாடகத்தை வகுப்பில் நடித்துக்காட்டுக.

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டிய செயல்பாடு.

2. சங்காலப் பெண் புலவர்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

1. ஔவையார்	7. காவற்பெண்டு
2. அள்ளூர் நன்முல்லையார்	8. வெள்ளிவீதியார்
3. ஆதிமந்தி	9. பொன்முடியார்
4. ஓக்கூர் மாசாத்தியார்	10. முடத்தாமக்கண்ணியார்
5. காக்கைப்பாடினியார்	11. வெண்ணிக்குயத்தியார்
6. நப்பசலையார்	

தெரிந்து தெளிவோம்

(i) சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே. – ஔவையார்

(ii) இவ்வே பீலியணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
கடியுடை வியன் நகரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே. – ஔவையார்

☆☆☆

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

1. நான் விரும்பும் தலைவர்.

நான் விரும்பும் தலைவர் – வ.உ.சி

அவையோர்க்கு வணக்கம்! நான் விரும்பிய தலைவரான வ.உ.சிதம்பரனாரைப் பற்றிப் பேச வந்துள்ளேன்.

சுதந்திரப் போருக்கு மகாத்மா காந்தி தலைமை ஏற்பதற்கு முன்பே, சுதந்திரப் போரில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர் "கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரம் பிள்ளை. பாலகங்காதர திலகரைத் தன் குருவாக ஏற்றவர்.

வெள்ளையர்களின் கடல் வாணிகத்தை ஒடுக்குவதற்காகவே சுதேசி கப்பலை ஓட்டியவர். அதற்காக அவர் செய்தவை ஏராளம். வெள்ளையர்களுக்கு எதிராக சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்க அவர் விரும்பினார். 1906 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், "சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி" என்ற பெயரில் கப்பல் கம்பெனி தொடங்கப் பதிவு செய்தார்.

பத்து லட்சம் ரூபாயைத் திரட்டினார். வடநாட்டுக்குச் சென்று, காங்கிரசு தலைவர்களின் உதவியுடன் "காலியா", "லாவோ" என்ற பெயர்களுடைய கப்பல்களை வாங்கிக் கொண்டு வெற்றிகரமாகத் தமிழகம் திரும்பினார். இவருடைய கப்பல் கம்பெனிக்குப் பொதுமக்கள் ஆதரவு அளித்தனர். இதனால் வெள்ளையர்கள் ஆத்திரம் அடைந்தனர்.

இதனால் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசியதாகவும், அரசுக்கு எதிரியான சுப்பிரமணிய சிவாவுக்கு அடைக்கலம் கொடுத்ததாகவும் சிதம்பரனார் மீது வழக்குத் தொடரப்பட்டது. அரசுக்கு எதிராகப் பேசிய குற்றத்திற்காக ஓர் ஆயுள் தண்டனையும் சுப்பிரமணிய சிவாவிற்கு அடைக்கலம் தந்ததற்காக இன்னொரு ஆயுள் தண்டனையும் (40 ஆண்டுகள்) விதிக்கப்பட்டது. தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் இந்த அப்பீலை விசாரித்து, இரட்டை ஆயுள் தண்டனையை 6 ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைத்தது.

கோவை, கண்ணனூர் சிறைகளில் தமது தண்டனைக் காலத்தைச் சிதம்பரனார் கழித்தார். சிறையில் செக்கிழுத்தார், கல்லுடைத்தார். 1912 டிசம்பர் மாத இறுதியில் சிதம்பரனார் விடுதலையானார்.

விடுதலையான பிறகும் வ.உ.சி பல துன்பங்களை அனுபவித்தார். அவர் வழக்கறிஞர் பட்டம் பெற்றிருந்த போதிலும் அதை ஆங்கிலேய அரசு பறிமுதல் செய்துவிட்டதால், அவர் எண்ணெய் வியாபாரம் செய்தார். மளிகைக் கடை நடத்தினார். தம் தாய்த்திருநாட்டிற்குப் பல தியாகங்களைச் செய்து வாழ்ந்தவர் என்பதால் இவரை எனக்கு மிகவும் பிடிக்கும். நன்றி!

2. நான் முதலமைச்சர் ஆனால்...

நான் முதலமைச்சரானால் நம் தமிழ்நாட்டிற்குப் பல நன்மைகள் செய்வேன். நான் முதலில் கல்வியில் சீர்திருத்தம் செய்வேன். அழியாத சொத்து கல்வி. கல்வி எவராலும் எப்போதும் அழிக்க முடியாத சொத்து. அதுமட்டுமன்று. ஒரு நாட்டில் அனைத்தையும் ஆக்கும் வல்லமை கல்விக்கு மட்டும்தான் உண்டு. கல்வித்துறையினர் நினைத்தால் உயர்ந்த அறிவும், ஆற்றலும், பெருமையும், பொருள் வளமும் உள்ள மக்களை உருவாக்க முடியும். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டில் கல்வித்துறை எவ்வளவு வளர்ச்சியடைந்தது என்பதைப் பொருத்துத்தான் உள்ளது. நாடு கல்வியால் உயர்ந்தால் வல்லரசு நாடாக மாறும். அதனால் என் முதல் பணியே கல்வியை மேம்படுத்துவதுதான். கல்வி கேள்வியில் சிறந்த சான்றோர்களின் ஆலோசனையின்படி பல புதிய சீர்திருத்தம் மேற்கொள்வேன். கிராமப்புற மாணவர்களும் கல்வி கற்கும் வண்ணம் சட்டங்கள் இயற்றுவேன்.

அடுத்ததாகப் பொருளாதாரச் சீர்திருத்தத்திற்கு நான் முனைந்து பாடுபடுவேன். அதற்கு உற்பத்திப் பெருக்கம் செய்து பொருள்களை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெருமளவில் ஈட்டுவேன்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

அறத்தால் வருவதே இன்பம்

இயல் 2

ஒன்றே குலம்

கவிதைப்பேழை

பாடல்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே. – திருமூலர்

சொல்லும் பொருளும்

1.	நமன்	– எமன்	5.	நாணாமே	– கூசாமல்
2.	சித்தம்	– உள்ளம்	6.	உய்ம்மின்	– ஈடேறுங்கள்
3.	நம்பர்	– அடியார்	7.	ஈயில்	– வழங்கினால்
4.	படமாடக் கோயில்	– படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்			

பாடலின் பொருள்

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. கூசாமல் செல்லவேண்டிய நல்வழி இதைவிட வேறு இல்லை. உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் இவற்றை நினைத்து ஈடேறுங்கள்.

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.

நூற்குறிப்பு

திருமந்திரம் என்ற நூலைத் **தமிழ் மூவாயிரம்** என்பர். இது பன்னிரு திருமறைகளுள் **பத்தாம் திருமுறை**யாக வைக்கப்பட்டுள்ளது. திருமந்திரம் என்னும் நூலிலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் குறிப்பு

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும், பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர் திருமூலர். இவர் இயற்றிய **திருமந்திரம்** மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் .....

அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர்
இ) சிறந்தனர் ஈ) துறந்தனர் [விடை: அ) பகர்ந்தனர்]

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .....

அ) ஆனந்த + வெள்ளம் ஆ) ஆனந்தன் + வெள்ளம்
இ) ஆனந்தம் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்
[விடை: இ) ஆனந்தம் + வெள்ளம்]

4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .....

அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும்
இ) உளிருக்கும் ஈ) உளருக்கும் [விடை: ஆ) உள்ளிருக்கும்]

குறுவினா

1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?

உண்மை அறிவனை உணர்ந்தோர் உள்ளத்தில் இறைவன் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றான்.

2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

இறைவனின் திருவடிகளின் மேல் பற்று வைக்காமல், பணத்தின் மீது ஆசை வைப்பது மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைகிறது.

சிறுவினா

குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன :

(i) "மேலான பொருளே! தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல் பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

(ii) நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றாய்.

(iii) மேலான பொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரிய செயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள் செய்வாயாக!" என்று குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுகிறார்.

சிந்தனை வினா

ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாவை?

ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்ய வேண்டிய நற்செயல்கள் :

(i) தன்னிலும் தகுதி முதலானவற்றில் குறைந்தவர்கள் என்றாலும் அவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

(ii) இன்சொல் மட்டுமே பேசி மகிழ வேண்டும்.

(iii) பிறருக்கு உண்டாகும் துன்பங்களைத் தம் துன்பமாக எண்ணி, இரக்கப்பட்டு, தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

(iv) நம் உடல் உழைப்பால் பிறருக்கு உதவ வேண்டும்.

(v) ஒருவரது நாக்கு பிறரைத் தூற்றவும், போற்றவும் செய்யும். நாவினால் சுட்ட வடு ஆறாது என்பதால், பிறர் மனம் புண்படாதபடி பேசுவதே பெரிய நற்பண்பாகும்.

அறத்தால் வருவதே இன்பம்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

கூடுதல் வினாக்கள்

நிரப்புக :

1. தந்தை பெரியாருக்கும் அண்ணல் அம்பேத்கருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் **அயோத்திதாசர்.**
2. அயோத்திதாசரைத் **தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை** என்று போற்றுவர்.
3. அயோத்திதாசரின் இயற்பெயர் **காத்தவராயன்.**
4. அயோத்திதாசர் பிறந்த ஊர் **சென்னை.**
5. அயோத்திதாசர் பிறந்த நாள் **20-05-1845.**
6. அயோத்திதாசர் அறிந்த மொழிகள் **தமிழ், பாலி, வடமொழி, ஆங்கிலம்.**
7. அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை உள்ள இடம் சென்னையில் உள்ள **தாம்பரம்.**
8. திராவிட மகாஜன சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு **1892.**

விடையளி :

1. அயோத்திதாசரின் சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தது எது?

(i) அயோத்திதாசர் தமிழ், பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

(ii) இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அயோத்திதாசரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

2. அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள் யாவை?

அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள் :

(i) போகர் எழுநூறு (ii) அகத்தியர் இருநூறு

(iii) சிமிட்டு இரத்தினச் சுருக்கம் (iv) பாலவாகடம்.

3. அயோத்திதாசர் எழுதிய நூல்கள் யாவை?

அயோத்திதாசர் எழுதிய நூல்கள் :

(i) புத்தரது ஆதிவேதம் (ii) இந்திரர் தேச சரித்திரம்

(iii) விவாக விளக்கம்

(iv) திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

4. தனக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் என்று தந்தை பெரியார் யார் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?

"பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும், தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள்" என்று தந்தை பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

5. அயோத்திதாசரின் கல்விச் சிந்தனைகள் யாவை?

அயோத்திதாசரின் கல்விச் சிந்தனைகள் :

(i) ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார்.

(ii) நிலவு நாளும் வளர்ந்து முழு நிலவாகி ஒளி வீசுவதுபோல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பா நான்கு வகைப்படும்: அவை (i) வெண்பா, (ii) ஆசிரியப்பா, (iii) கலிப்பா, (iv) வஞ்சிப்பா.

கற்பவை கற்றபின்

1. எழுத்து இலக்கணத்தின்படியும் யாப்பு இலக்கணத்தின்படியும் எழுத்துகளின் வகைகளை வேறுபடுத்தி ஓர் அட்டவணை உருவாக்குக.

எழுத்து இலக்கணத்தின்படி எழுத்துகளின் வகை :



யாப்பு இலக்கணத்தின்படி எழுத்துகளின் வகை :



2. வெண்பாக்களால் அமைந்த நூல்களின் பெயர்களைத் திரட்டுக.

வெண்பாக்களால் அமைந்த நூல்கள் :

1. திருக்குறள்	6. மூதுரை	11. திரிகடுகம்
2. நாலடியார்	7. நல்வழி	12. ஆசாரக்கோவை
3. முத்தொள்ளாயிரம்	8. நான்மணிக்கடிகை	13. பழமொழி
4. நளவெண்பா	9. இனியவை நாற்பது	14. சிறுபஞ்சமூலம்
5. நீதிவெண்பா	10. இன்னா நாற்பது	

கூடுதல் வினாக்கள்

நிரப்புக.

1. மரபுக் கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம்.
2. செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு.
3. யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகள் மூன்று.
4. எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

வாழ்வியல்

இயல் 2

திருக்குறள்

நூல் வெளி

பெருநாவலர், முதற்பாவலர், நாயனார் முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

படைச்செருக்கு

1. **கான முயல்எய்த அம்பினில் யானை**
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

தெளிவுரை : காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும்).

அணி : பிறிதுமொழிதல் அணி

2. **பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்**
ஊராண்மை மற்றுஅதன் எஃகு.

தெளிவுரை : பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கும் துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

நட்பு

3. **நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
பண்புடை யாளர் தொடர்பு.

தெளிவுரை : நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோலப் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

அணி : உவமை அணி

4. **நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்**
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

தெளிவுரை : நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று; நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.

நட்பு ஆராய்தல்

5. **ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
தான்சாம் துயரம் தரும்.

தெளிவுரை : மீண்டும், மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும்.

அறத்தால் வருவதே இன்பம்

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

குன்றென நிமிர்ந்துநில்

இயல் 3

உயிர்க்குணங்கள்

கவிதைப்பேழை

பாடல்

அறிவுஅருள் ஆசைஅச்சம்
அன்புஇரக்கம் வெகுளிநாணம்
நிறைஅழுக்காறு எளிமை
நினைவுதுணிவு இன்பதுன்பம்
பொறைமதம் கடைப்பிடிகள்
பொச்சாப்பு மானம்அறம்
வெறுப்புஉவப்பு ஊக்கம்மையல்
வென்றிஇகல் இளமைமூப்பு
மறவிஓர்ப்பு இன்னபிற
மன்னும்உயிர்க் குணங்கள்எல்லாம்
குறைவறப் பெற்றவள்நீ
குலமாதே பெண்ணரசி
இறைமகன் வந்திருக்க
இன்னும்நீ உறங்குதியோ
புறப்படு புன்னகைநீ
பூத்தேலோ ரெம்பாவாய்!

– இறையரசன்

சொல்லும் பொருளும்

1. நிறை	– மேன்மை	6. அழுக்காறு	– பொறாமை
2. பொறை	– பொறுமை	7. மதம்	– கொள்கை
3. பொச்சாப்பு	– சோர்வு	8. இகல்	– பகை
4. மையல்	– விருப்பம்	9. மன்னும்	– நிலைபெற்ற
5. ஓர்ப்பு	– ஆராய்ந்து தெளிதல்		

பாடலின் பொருள்

அறிவு, கருணை, ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், நாணம், மேன்மை, பொறாமை, எளிமை, நினைவு, துணிவு, இன்பம், துன்பம், பொறுமை, கொள்கையைப் பின்பற்றுதல், சோர்வு, மானம், அறம், வெறுப்பு, மகிழ்ச்சி, ஊக்கம், விருப்பம், வெற்றி, பகை, இளமை, முதுமை, மறதி, ஆராய்ந்து தெளிதல் போன்றவை இவ்வுலகில் நிலைபெற்ற மனிதர்களிடம் உள்ள பண்புகளாகும். இவற்றையுடைய மனிதகுலத்தில் பிறந்த பெண்ணே! நற்பண்புகள் எவையென அறிவுறுத்த இறைவனின் திருக்குமாரன் வந்தபின்னும் நீ உறங்கலாமா? உண்மையை உணர, புன்னகை பூத்து நீ புறப்படுவாயாக!

ஆசிரியர் குறிப்பு

இறையரசனின் இயற்பெயர் சே.சேசுராசா என்பதாகும். கல்லூரி ஒன்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். ஆண்டாள் இயற்றிய திருப்பாவையைத் தழுவி, "கன்னிப்பாவை" என்னும் நூலை எழுதியுள்ளார். அந்நூலில் இருந்து ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

2. 'நம்பிக்கையே வெற்றி' – என்பதை உணர்த்தும் கதை ஒன்றனைத் தேடி எழுதி வருக.

ஓர் ஊரில் விவசாயி ஒருவன் இருந்தான். வயதான கழுதை ஒன்று இருந்தது. அக்கழுதை ஒருநாள் தோட்டத்தில் இருந்த கிணற்றில் தெரியாமல் விழுந்துவிட்டது. விவசாயிக்கு எப்படி கழுதையை வெளியே கொண்டு வருவது எனத் தெரியவில்லை.

அக்கழுதையை வெளியே கொண்டு வருவதற்குச் செலவு அதிகமாகும் என்றனர் ஊர் மக்கள். அக்கழுதைக்கோ வயதாகிவிட்டது. அதனை விற்றால்கூட சிறுதொகைதான் கிடைக்கும். அதனால் பணத்தை வீணாகச் செலவு செய்ய வேண்டாம் என எண்ணினான். ஊர் மக்களிடம் பேசி ஒரு முடிவெடுத்தான். அது என்னவெனில் 'ஆளுக்குக் கொஞ்சம் மண்ணை எடுத்துக் கிணற்றில் போட வேண்டும். அப்போது கிணற்றில் விழுந்த கழுதை மண் மூடி இறந்துவிடும்' என்பதுதான் அவன் எடுத்த முடிவு.

எல்லோரும் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணை எடுத்துப் போட்டனர். கொஞ்ச நேரம் கழுதையின் அலறல் சத்தம் கேட்டது. அதற்குப் பின் அலறல் சத்தம் கேட்கவில்லை. விவசாயி எட்டிப் பார்த்தான். கழுதை ஊரார் கொட்டிய மண்ணைத் தனக்குச் சாதகமாய் மாற்றிக் கொண்டது. ஒவ்வொருமுறை மண் அதன்மேல் விழும் போதும் அதனை உதறி விட்டுவிட்டு மேலே வந்தது. இதனைக் கண்ட விவசாயி மீண்டும் மீண்டும் மண்ணைக் கொட்டி கழுதையை ஆபத்திலிருந்து காப்பாற்றினான்.

கழுதை எப்படியும் உயிர் பிழைப்போம் என்று நம்பிக்கையுடன் முயற்சி செய்ததால் காப்பாற்றப்பட்டது. இக்கதை மூலம் நாம் உணர்வது கழுதையின் நம்பிக்கை நிறைந்த செயல் ஆகும்.

கூடுதல் வினாக்கள்

நிரப்புக :

1. மனிதனின் உள்ளத்தில் இருக்கவேண்டிய 'கை' நம்பிக்கை.
2. நாம் நடக்கத் தயாராய் இருந்தால் பாதைகள் மறுப்புச் சொல்லாது.
3. தூக்கிக் கொண்டு திரியக்கூடாதது கவலையை.
4. தூங்கும்போது பூமி படுக்கையாகும். விழித்து நடக்கும்போது பாதையாகும்.
5. மு.மேத்தா வானம்பாடி இயக்க கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.
6. மு.மேத்தாவின் படைப்புகளுள் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகாயத்துக்கு அடுத்தவீடு.

விடையளி :

1. மு.மேத்தா இயற்றிய நூல்கள் யாவை?

மு.மேத்தா இயற்றிய நூல்கள் : கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், சோழநிலா, மகுட நிலா, ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும் புதுக்கவிதை நூல் உள்ளிட்ட பல நூல்கள்.

2. எப்போது நம் விரல்களில் கதிரவன் ஒளிவீசும்?

நாம் செயல்படப் புறப்படும் திசைதான் இனி இந்தப் பூமிக்குக் கிழக்கு. கதிரவன் நம் விரல்களில் விளக்காக ஒளிவீசும்.

3. எப்போது பாதைகள் எதிர்க்காது?

நமது பாதங்கள் நடக்கத் தயாராக இருந்தால் நாம் செல்லும் பாதைகள் நம்மை எதிர்க்கப் போவதில்லை.

4. மு.மேத்தா பற்றி எழுதுக.

(i) மு.மேத்தா வானம்பாடி இயக்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

(ii) புதுக்கவிதையைப் பரவலாக்கிய முன்னோடிகளுள் ஒருவராக இவரைப் போற்றுவர்.

(iii) கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், சோழநிலா, மகுடநிலா உள்ளிட்ட பல நூல்களையும் திரையிசைப் பாடல்களையும் எழுதியுள்ளார். கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

(iv) இவர் எழுதிய 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்னும் புதுக்கவிதை நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

5. அரசியல் அமைப்புச் சட்டம் - குறிப்பு எழுதுக.

உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாக இந்தியா விளங்குகிறது. இந்நாட்டில் பல்வேறுபட்ட இன, மொழி, சமயங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். இவர்களை ஒன்றிணைக்க ஆட்சி நடத்த அடிப்படையான சட்டம் தேவைப்படுகிறது. இச்சட்டத்தினையே அரசியல் அமைப்புச் சட்டம் என்பர்.

உலகின் உள்ள அனைத்து நாடுகளும் அந்தந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டே இயங்குகின்றன. அஃது எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப்படாததாகவோ இருக்கக்கூடும்.

6. அம்பேத்கரின் கல்வி பற்றி எழுதுக.

அம்பேத்கர் மும்பையில் எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் 1904 ஆம் ஆண்டு சேர்ந்தார். 1907 ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்தார். மும்பைப் பல்கலைக்கழகத்தில் 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.

அமெரிக்கா சென்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.

1915இல் பண்டைக்கால இந்திய வணிகம் என்ற ஆய்விற்காக முதுகலைப்பட்டம் பெற்றார்.

இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்ற ஆய்வுக்காக கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக இலண்டன் சென்றார். 1921ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923 ஆம் ஆண்டு ரூபாய் பற்றிய பிரச்சனை என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக முனைவர் பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் சட்டப் படிப்பில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.

☆☆☆

குன்றென நிமிர்ந்துநில்

இயல் 3 பால் மனம்

விரிவானம்

ஆசிரியர் குறிப்பு

கோமகளின் இயற்பெயர் **இராஜலட்சுமி**; சிறுகதைகள், புதினங்கள், குறும் புதினங்கள், வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் முதலியவற்றை எழுதியுள்ளார். இவரது **அன்னை பூமி** என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் **தமிழ் அன்னை** விருதினையும் பெற்றுள்ளார். **உயிர் அமுதாய், நிலாக்கால நட்சத்திரங்கள், அன்பின் சிதறல்** உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். பால் மனம் எனும் இக்கதை **அ.வெண்ணிலா** தொகுத்த **மீதமிருக்கும் சொற்கள்** எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

என்றாலும் அவர்களுடைய கருத்துகளையும் ஏற்றுக் கொள்ளுதல். வறுமை நம்மைச் சூழ்ந்தாலும் தீய செயல்களைச் செய்யாதிருத்தல் இவற்றை நாம் நம் வாழ்வில் கடைப்பிடித்தல் வேண்டும்.

நற்பண்புகளின் ஒட்டுமொத்த உருவமே ஒழுக்கம்தான். அதில் முதலிடம் பெறுவது வாய்மை. நாம் பொய் பேசக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஒரு பொய் பேசினால் அதனை மறைக்க மீண்டும் மீண்டும் பல பொய்களைப் பேச வேண்டியிருக்கும். அவ்வாறு பொய் பேசும்போது பல அவமானங்களைச் சந்திக்க நேரும். பொய்பேசி வெல்வதைவிட மெய்பேசி தோற்பது சிறந்தது.

அடுத்தது, 'காலமறிதல்' காலத்தை அறிந்து செயல்பட வேண்டும். காலந்தவறாமல் நேரத்திற்குச் செயல்களைச் செய்ய வேண்டும். பிறகு செய்து கொள்ளலாம் என்று தள்ளிப் போடக்கூடாது. காலம் நமக்காகக் காத்திருக்காது. நாம்தான் காலத்திற்காகக் காத்திருந்து செயல்பட வேண்டும். 'மழையில் உப்பு விற்பதும், காற்றில் மாவு விற்பதும்' முட்டாள்தனம். அதனால், வள்ளுவர், காலம் அறிதல் பற்றிக் கூறியதை நாம் பின்பற்ற வேண்டும்.

அடுத்தது சேவை மனப்பான்மை. நாம் இருக்கும் இடங்களைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், நம் வீடு, நம் வீட்டு வாசல், நம் தெரு இவற்றை சுத்தம் செய்தல். இதனை ஒவ்வொருவரும் மேற்கொண்டால் வீடும் நாடும் சுத்தமாகும். மருத்துவ உதவி பெறுவதற்கு வழிகாட்டுதல், விழாக்காலங்களில் பொது இடங்களில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க அங்குள்ள கூட்டத்தை ஒழுங்குப்படுத்துதல், எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவைக் கற்றுக் கொடுத்தல், செய்தித்தாள்களை வாசிக்கக் கற்றுக் கொடுத்தல் இவற்றையெல்லாம் நாம் நம் வாழ்வில் செயல்படுத்தினால் நாமே நற்பண்புகளில் சிறந்தவர் என்ற பெயர் பெற்று அனைவராலும் பாராட்டப்படுவோம்.

சொல்லக் கேட்டு எழுதுக

அம்பேத்கர் தமது வாழ்க்கையில் 'புதிய திருப்பம்' காண வழி ஒன்றைக் கண்டறிந்தார். அது 'படிப்பு, படிப்பு, படிப்பே' ஆகும். அதை அடையும் முயற்சியில் அயராது உழைக்கத் தொடங்கினார். எப்போதும் புத்தகமும் கையுமாகவே திகழ்ந்தார். இதைக் கண்ட அவருடைய தந்தை வேறு செலவுகளைக் குறைத்துக் கொண்டும் கடன் வாங்கியும் புத்தகங்களை வாங்கித் தந்தார். புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தை அம்பேத்கர் கடைசிவரை கடைப்பிடித்தார். வட்டமேசை மாநாட்டிற்காக அம்பேத்கர் இங்கிலாந்து சென்றார். மாநாடு முடிந்த பிறகு அமெரிக்கா சென்ற அவர் தம் பழைய நண்பர்களையும் பேராசிரியர்களையும் கண்டு மகிழ்ந்தார். தாய்நாடு திரும்பிய போது பதினான்கு பெட்டிகள் நிறையப் புத்தகங்களைக் கொண்டு வந்தார்.

அறிந்து பயன்படுத்துவோம்

தான், தாம் என்னும் சொற்கள்

தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையைக் குறிக்கும். இவ்வேறுபாட்டினை அறிந்து தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

தாம், தம்மை, தம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மைத் தொடர்களில் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா.) தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
மாணவன் தனது கையால் பெற்றுக் கொண்டான்.

(இங்குத் தலைவர் என்பது ஒருவரைக் குறித்தாலும் இது மரியாதைப் பன்மை ஆகும்.)

(எ.கா.) மாடுகள் தமது தலையை ஆட்டின.
கன்று தனது தலையை ஆட்டியது.

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

III. அடி மாறாமல் எழுதுக : (1 × 4 = 4)

25. 'ஒன்றே குலமும்' எனத் தொடங்கும் 'ஒன்றே குலம்' பாடலை நான்கு வரிகள் எழுதுக.

IV. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி : (3 × 2 = 6)

26. சந்திப்பிழை என்றால் என்ன?
27. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.
28. அந்தாதி என்றால் என்ன?
29. வேற்றுமைத்தொகை – விளக்குக.
30. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி : (2 × 4 = 8)

31. சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?
32. மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?
33. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?
34. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?

VI. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி : (1 × 6 = 6)

35. எம்.ஜி.ஆரின் பண்புநலன்களை விளக்கி எழுதுக. (அல்லது)
குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

VII. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி : (1 × 6 = 6)

36. உழைப்பே உயர்வு என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)
புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

VIII. பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக. (1 × 2 = 2)

37. படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி.

IX. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக. : (2 × 1 = 2)

38. திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கருதப்படுபவர். அவர் பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படுபவர்.

விடைகள்

1. நிலப்பகுதி
2. மதயானைகள்
3. நீள் + உழைப்பு
4. இன்பம் + துன்பம்
5. தாமினி
6. காலிறங்கி
7. சந்திரிகையின் கதை, தராசு.
8. கைக்குழந்தைகள்
9. அ) வையம்
10. இ) ஊக்கம்
11. அல்ல
12. அல்லோம்.
13. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.
14. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
15. ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ் கொண்டு வாழ்கிறது.
16. எதையும் நன்கு ஆராய்ந்து ஒரு பக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்.
17. பார்க்க மூன்றாம் பருவ இயல் 2 – திருக்குறள் புத்தக வினா கேள்வி எண் – 4
18. பார்க்க மூன்றாம் பருவ இயல் 1 – உரைநடை – புத்தக வினா கேள்வி எண் – 1
19. பார்க்க மூன்றாம் பருவ இயல் 2 – உரைநடை – புத்தக வினா கேள்வி எண் – 3
20. பார்க்க மூன்றாம் பருவ இயல் 3– உரைநடை – புத்தக வினா கேள்வி எண் – 3
21. பார்க்க மூன்றாம் பருவ இயல் 3– உரைநடை – புத்தக வினா கேள்வி எண் – 2
22. பார்க்க மூன்றாம் பருவ இயல் 2 – ஒன்றே குலம் – புத்தக வினா கேள்வி எண் – 2
23. பார்க்க மூன்றாம் பருவ இயல் 2 – மெய்ஞான ஒளி – புத்தக வினா கேள்வி எண் – 2

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

ENGLISH

TERM III

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

UNIT 1

Prose

The Nose-Jewel

- C. Rajagopalachari

MIND MAP



GLOSSARY

admitted - made public
bound - connected
concern - worry
confined *(v)* - **restricted, kept in a limited space or area**
consoled *(v)* - **comforted (someone) in the time of grief, disappointment**
cruel *(adj)* - **merciless or heartless**
disdain *(n)* - **feeling of contempt or scorn**

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

ADDITIONAL QUESTIONS

I. Choose the correct Synonyms for the Italicized words :

1. The female sparrow said with ***disdain***, "Let me see what help you can do for him".
(a) respect (b) scorn (c) value (d) admire [Ans (b) scorn]
2. Find some ***grub;*** the young ones are hungry.
(a) food (b) smoothen (c) poison (d) task [Ans (a) food]
3. She is very careless and ***ignorant.***
(a) educated (b) unaware (c) polite (d) humble [Ans (b) unaware]
4. If tomorrow the police should come and search our house, it will be ***disgrace*** to us.
(a) honour (b) glory (c) praise (d) dishonour [Ans (d) dishonour]
5. The maid-servant Kuppayi was ***suspected*** by everyone to have stolen it.
(a) knew (b) doubted (c) amazed (d) believed [Ans (b) doubted]
6. Ramayya's heart was in a ***flutter.***
(a) calm (b) still (c) steady (d) flap [Ans (d) flap]
7. She was ***confined*** to her bed.
(a) invasive (b) restricted (c) released (d) freed [Ans (b) restricted]
8. The loss of the jewel had to be ***admitted***.
(a) dismissed (b) excluded (c) accepted (d) refused [Ans (c) accepted]
9. "And a good thing too", said the ***cruel*** male sparrow.
(a) merciful (b) kind (c) merciless (d) compassionate [Ans (c) merciless]
10. The male bird answered ***gravely***, "Did I tell her to steal the thing?"
(a) seriously (b) cheerfully (c) joyfully (d) happily [Ans (a) seriously]

II. Choose the correct antonyms for the Italicized words.

1. "Why does the lady of this house always ***quarrel*** with her husband?"
(a) fight (b) argue (c) agree (d) shout [Ans (c) agree]
2. "Please do not talk about what does not ***concern*** us."
(a) anxiety (b) worry (c) uneasiness (d) disregard [Ans (d) disregard]
3. The male bird went out in ***search*** of little worms for the young ones.
(a) ignore (b) seek (c) find (d) quest [Ans (a) ignore]
4. We should go and ***deliver*** it to the village magistrate.
(a) bring (b) hand over (c) collect (d) give [Ans (c) collect]
5. He would go into a ***rage*** if he knew that you had lost the diamond nose-stud.
(a) anger (b) fury (c) passion (d) peace [Ans (d) peace]
6. The loss of the jewel had to be ***admitted.***
(a) confessed (b) denied (c) allowed (d) entered [Ans (b) denied]
7. Everyone thought that Kuppayi had ***stolen*** it.
(a) sacked (b) swiped (c) donated (d) robbed [Ans (c) donated]
8. She soon developed a ***severe fever*** and was confined to her bed.
(a) minor (b) great (c) intense (d) harsh [Ans (a) minor]

Prose

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

Ans

Word	Euphemisms
Housewife	homemaker
Old people	senior citizen
Short	vertically challenged
Prison	correctional facility
Toilet	restroom
Homeless	on the street
Lazy	couch potato
